**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,</u>

<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.</u>

<u>2022ம் வருடம் ஜீன் திங்கள் 21ம் நாள் செவ்வாய்கிழமை</u>

**<u>அ.வ.எண்.295/2020 இல் இ.ம.எண்.01/2020</u>**

1. பொள்ளாச்சி தாலூக்கா, மாப்பிள்ளைகவுண்டன்புதூர் அஞ்சல், S.குமாரபாளையம், கதவு எண்.6/86 என்கிற விலாசத்தில் வசித்து வரும் லேட்.கந்தசாமி கவுண்டர் மகன் சுமார் 62 வயதுள்ள திரு.சிவசாமி.

2. பொள்ளாச்சி தாலூக்கா, மாப்பிள்ளைகவுண்டன்புதூர் அஞ்சல், S.குமாரபாளையம், கதவு எண்.6/86 என்கிற விலாசத்தில் வசித்து வரும் லேட்.கந்தசாமி கவுண்டர் மகன் சுமார் 45 வயதுள்ள திரு.ரத்தினசாமி.

3. பொள்ளாச்சி தாலூக்கா, கோவை ரோடு, சேரன் நகர் குடியிருப்பு, G.I.C. நகர், கதவு எண்.4/208 என்கிற விலாசத்தில் வசித்து வரும் லேட்.திருமலைசாமி கவுண்டர் மகன் சுமார் 56 வயதுள்ள திரு.கந்தவடிவேல்.

... மனுதாரர்கள் / வாதிகள்

/ எதிர் /

பொள்ளாச்சி தாலூக்கா, மாப்பிள்ளைகவுண்டன்புதூர் அஞ்சல், S.குமாரபாளையம், தோட்டத்து சாளை, என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.சதீஷ் மனைவி சுமார் 40 வயதுள்ள திருமதி.காயத்ரி.

... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

தாவா சி மற்றும் டி செட்யூல் வண்டித்தடத்தின் மீதான மனுதாரர்கள் / வாதிகளின் அமைதியான சுவாதீன அனுபவத்தினை எதிர்மனுதாரர் / பிரதிவாதியோ, அவரது ஆட்கள் வகையறாக்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும், அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும் பிறப்பிக்கக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2–ன் கீழ் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 01.10.2020

இம்மனுவானது கடந்த 09.06.2022ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.P.சண்முகம் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.மனோகர் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர்கள் / வாதிகள் மற்றும் எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**<u>இறுதி உத்தரவு</u>**

| | |
|---|---|
| 1. | முடிவாக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு, 12.06.1985ம் தேதியிட்ட ம.சா.ஆ.2 வண்டித்தட ஒப்பந்தம் மற்றும் 28.01.1999ம் தேதியிட்ட வண்டித்தட ஒப்பந்தம் ம.சா.ஆ.3 மற்றும் 02.09.2008ம் தேதியிட்ட ம.சா.ஆ.5 வண்டித்தட ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தாவா ஏ மற்றும் பி செட்யூல் சொத்திற்கு செல்வதற்குண்டான வண்டித்தடத்தினை மனுதாரர்கள் / வாதிகள் பயன்படுத்துவதை அசல் வழக்கு முடிவடையும் வரை எதிர்மனுதாரர் / பிரதிவாதி எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும், ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள தற்காலிக உறுத்துக் கட்டளை பரிகாரம் உறுதி செய்யப்பட்டும் உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத்தொகை இல்லை. |

**<u>DESCRIPTION OF PROPERTY</u>**

**<u>"A" Schedule :–</u>**

முதலில் திருப்பூர் பதிவு மாவட்டம், தற்போது கோவை பதிவு மாவட்டம், பொள்ளாச்சி சப்ரிடிடு, பொள்ளாச்சி தாலுாக்கா, ஜமீன் புரவிபாளையம் தாக்கல் 25/2, சேர்வைக்காரன்பாளையம் கிராமப்புலத்தில் 147 பட்டா, க.ச.183 நெ. காலை, பு.ஏ.6.30 க்கு ரூ.8.63 இதில் கிழபுறம் தென்வடல் நீளியாக அதாவது கந்தசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட பு.ஏ.2.30 பூமிக்கும் கிழக்கு, க.ச.185 நெ. காலைக்கும் வடக்கு, க.ச.182 நெ. காலைக்கும் மேற்கு, க.ச.181/3 நெ. காலைக்கும் தெற்கு, இதன் மத்தியில் பு.ஏ.4.00 க்கு ரூ.5.48. ஷை காலை தற்போதைய நில உடைமைகளை புதுபிக்கும் திட்டப்படி அளந்து வழங்கப்பட்ட பட்டாவில் கண்டுள்ளபடி தனிப்பட்டா எண்.6, க.ச.183 நெ. காலை பு.ஹெக்.2.55.0 க்கு ரூ.8.63 என தாக்கலாகியுள்ளது. ஷை கிரைய பூமி இதில் ஒரு பாகம்.

**"B" Schedule :–**

முதலில் திருப்பூர் பதிவு மாவட்டம், தற்போது கோவை பதிவு மாவட்டம், பொள்ளாச்சி உபபதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், புரவிபாளையம் கிராமம் தாக்கல் சேர்வைகாரன்பாளையம் கிராமம் புலத்தில் 173 நெ. பட்டா க.ச.45/4 நெ. காலை ந.ஏ.0.95 க்கு தரம் ரூ.6.83.

பின்னும் 152 நெ. பட்டா க.ச.205 நெ. காலை பு.ஏ.12.75 க்கு தரம் ரூ.17.47 இதில்,

| | |
|---|---|
| சூலக்கல் ஆற்றுக்கும் | .... வடக்கு, |
| இதே காலையில் பழனிச்சாமிகவுண்டர் பூமிக்கும், க.ச.46/4 நெ. காலை புறம்போக்கு ஓடைக்கும் | .... தெற்கு, |
| க.ச.180/1 நெ. காலைக்கும், க.ச.181 நெ. காலைக்கும் | .... மேற்கு, |
| க.ச.206/3 நெ. காலைக்கும் | .... கிழக்கு, |

இதன் மத்தியில் பு.ஏ.12.21 க்கு தரம் ரூ.16.73 இந்த பூமியும் இதில் உள்ள

துருஸ்து கிணறு ஒன்றும் ஷை கிணற்றில் வைத்துள்ள 7½ எச்.பி. எலக்ட்ரிக் மோட்டார் பம்புசெட் ஒன்றும், மின் இணைப்பு எண்.164 (எஸ்.குமாரபாளையம் பகிர்மானம்) அதன் காப்புத்தொகை வகையராவும்.

ஆக ஒட்டு பு.ஏ.13.16 க்கு தரம் ரூ.23.56 இந்த பூமிகளும் ஷை பூமிகளுக்கு உண்டான மாமூல் தடபாத்தியங்கள் சகிதம்.

மேற்படி பூமிகள் யு.டி.ஆர். படி பட்டா எண்.49, க.ச.205 நெ. காலை புஞ்சை ஹெக்டேர் 5.16.0 க்கு ரூ.17.47 என்றும், பட்டா எண்.512 க.ச.45/4 நெ.காலை நஞ்சை ஹெக்டேர் 0.38.5 க்கு ரூ.6.83 என்றும் பட்டா தாக்கலாகி உள்ளது.

**"C" Schedule :–**

**Item I :–**

முதலில் திருப்பூர் பதிவு மாவட்டம், தற்போது கோவை பதிவு மாவட்டம், பொள்ளாச்சி சப்ரிடிடு, பொள்ளாச்சி தாலூக்கா, ஜமீன் புரவிபாளையம் தாக்கல் 25/2 சேர்வைகாரன் பாளையம் கிராமம் புலத்தில் க.ச.180 நெ. காலை பு.ஏ.2.37, க.ச.181 நெ. காலை பு.ஏ.5.72 இவைகளில் அதாவது க.ச.181 நெ. காலையில் தென்வடல் புறம்போக்கு இட்டேரியிலிருந்து தென்வடலாகவும், அதிலிருந்து கிழமேலாகவும் அதைத் தொடர்ந்து க.ச.180 நெ. காலையில் கிழமேலாகவும், தென்வடலாகவும் அதாவது தற்போதை நிலஉடமை மேம்பாட்டுத் திட்ட புது சர்வேயில் பிளான்மார்க் செய்யப்பட்டுள்ளபடி உள்ள வண்டித்தடத்தின் வழியாக 4–லக்கமிட்டவருக்கும் அரவது கணவர் கந்தசாமி கவுண்டருக்கும் பாத்தியப்பட்ட க.ச.183 நெ. காலை வரையில் உள்ள 7 ½ அடி அகல வண்டித்தடம் மட்டும்.

**Item–2 :–**

முதலில் திருப்பூர் பதிவு மாவட்டம், தற்போது கோவை பதிவு மாவட்டம், பொள்ளாச்சி சப்ரிடிடு, பொள்ளாச்சி தாலூக்கா, ஜமீன் புரவிபாளையம் தாக்கல் 25/2 சேர்வைகாரன் பாளையம் கிராமம் புலத்தில் க.ச.180 நெ. காலை பு.ஏ.2.37, க.ச.181 நெ. காலை பு.ஏ.5.72 இவைகளில் அதாவது க.ச.181 நெ. காலையில் தென்வடல் புறம்போக்கு இட்டேரியிலிருந்து தென்வடலாகவும், அதிலிருந்து

கிழமேலாகவும் அதைத் தொடர்ந்து க.ச.180 நெ. காலையில் கிழமேலாகவும், தென்வடலாகவும் க.ச.205 நெ. காலையில் அன்னபூரணி வகையராவிடம் கிரையம் பெறப்போகும் பூமி வரையில் உள்ள 7½ அடி அகல வண்டித்தடம் மட்டும்.

**"D" Schedule :–**

முதலில் திருப்பூர் பதிவு மாவட்டம், தற்போது கோவை பதிவு மாவட்டம், பொள்ளாச்சி உபபதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், 25/2 சேர்வைக்காரன்பாளையம் கிராமம் புலத்தில் க.ச.180/2c காலையாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ள தடத்தில் அதாவது தென்கோட்டில் கிழகோட்டில் கிழமேல் 3.6 மீட்டர் ( 12½ அடி) அகலத்தில் தென்வடல் 3.8 மீட்டர் (13 அடி) நீளத்திலும் அதன் தொடர்ச்சியாக க.ச.181/2 நெ. காலை வண்டித்தடத்தில் கிழமேல் 3.6 மீட்டர் (12½ அடி) அகலத்திலும் இதன் கிழபுரம் க.ச.181/3 நெ. காலையில் கிழமேல் 1.4 மீட்டர் (5 அடி) அகலத்திலும் தென்மேற்கில் கிராசாக 4.4. மீட்டர் (14½ அடி) அகலத்தில் முக்கோண வடிவத்திலும் அதை தொடர்ந்து க.ச 181/2 நெ. காலையாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ள வண்டித்தடத்தில் வடக்கேயிருந்து கிழமேல் 3.6 மீட்டர் (12½ அடி) அகலத்தில் தென்வடலாகவும் அதை தொடர்ந்து மேற்கே வளைவில் 4.9 மீட்டர் (16 அடி) அகலத்திலும் அதை தொடர்ந்து மேற்கே தென்வடல் 3.6 மீட்டர் (12½ அடி) அகலத்தில் கிழமேலாகவும் அதைத் தொடர்ந்து தெற்கே வளைவில் 4.9 மீட்டர் (16 அடி) அகலத்திலும் அதைத் தொடர்ந்து தெற்கே கிழமேல் 3.65 மீட்டர் (12½ அடி) அகலத்தில் தென்வடலாகவும் அதிலிருந்து மேற்கே வளைவில் 4.9 மீட்டர் (16 அடி) அகலத்தில் 5 லக்கமிட்டவரின் க.ச.204 நெ.காலை வரை விடப்பட்டுள்ள (அதாவது க.ச.181/2ல் 0.11 ½ செண்ட் க.ச.180/2cல் 0.001/4 செண்ட்) வண்டித்தடத்தில் 5 லக்கமிட்டவரும் அவர் வகையராப் பேர்களும் 5 லக்கமிட்டவரின் சொத்தை எதிர்காலத்தில் அடைபவர்களும் அவர்களின்

வகையராப் பேர்களும் சந்ததி பரம்பரையாக வண்டி கால்நடை ஆள் கோட்டேறு மற்றும் சகல வாகனாதிகளும் போகவர உபயோகித்துக் கொள்ளும் தடபாத்தியம் மட்டும்.

மேற்படி "C" மற்றும் "D" ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள வண்டித்தடம் க.ச.180/2c மற்றும் க.ச.181/2 ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. ஷை உட்பிரிவின் படி ஷை வண்டித்தடத்தின் அகலம் சுமார் 14 அடி ஆகும். மேற்படி வண்டித்தடம் தாவா வரைபடத்தில் "A, B, C, D" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வுத்தரவு 2022ம் வருடம் ஜீன் மாதம் 21ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒப்பம்/−(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---

**இறுதி உத்தரவு**
அ.வ.எண்.295/2020
இல்
இ.ம.எண்.01/2020
நாள் : 21.06.2022
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

---